**செ. கு. எண்:052** **நாள் :18.02.2016**

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் **செல்வி ஜெ ஜெயலலிதா** அவர்களின் அறிக்கை – 18.2.2016

22.9.2015 அன்று மதுரை மாவட்டம், கோச்சடை கிராமத்தைச் சேர்ந்த திரு. மாரியப்பன் என்பவரின் மகன் இளங்கோ;

24.9.2015 அன்று திருவள்ளூர் மாவட்டம், அம்பத்தூர் வட்டம், பாடியைச் சேர்ந்த திரு. முனியாண்டி என்பவரின் மனைவி முத்துலட்சுமி;

நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், ராதாநல்லூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. திருஞானம் என்பவரின் மனைவி சிவகாமி;

27.9.2015 அன்று வேலூர் மாவட்டம், அணைக்கட்டு வட்டம், கழனிப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த திரு. வெங்கடேசன் என்பவரின் மகள் தாட்சாயிணி;

28.9.2015 அன்று சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், ஆதனூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கண்ணன் என்பவரின் மகன் ஆனந்தகுமார்;

29.9.2015 அன்று சேலம் மாவட்டம், ஆட்டையாம்பட்டி கிராமத்தைச் சேர்ந்த திரு. கந்தசாமி என்பவரின் மகன் கண்ணுப்பையன்;

2.10.2015 அன்று சென்னை, வில்லிவாக்கத்தைச் சேர்ந்த திரு. ராஜ் என்பவரின் மகன் தங்கமணி;

4.10.2015 அன்று வேலூர் நகரம், ஓ.எம்.சி. தெருவைச் சேர்ந்த திரு. சுப்பிரமணி என்பவரின் மகள் சந்தியா;

11.10.2015 அன்று சிவகங்கை மாவட்டம், திருப்புவனம் வட்டம், வெள்ளக்கரை கிராமத்தைச் சேர்ந்த திரு. கருப்பண்ணன் என்பவரின் மகன் கார்த்திகேயன்;

24.10.2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை வட்டம், பச்சமலையான்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு ஆண்டிச்சாமி என்பவரின் மனைவி முருகேஸ்வரி;

1.10.2015 திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம், சீவலப்பேரி கிராமத்தைச் சேர்ந்த திரு. முருகன் என்பவரின் மகன் ஐயப்பன்;

6.10.2015 அன்று தருமபுரி மாவட்டம், பாலக்கோடு வட்டம், பொம்மஹள்ளி கிராமத்தைச் சேர்ந்த திரு. மாதையன் என்பவரின் மகள் சத்யா, திரு. குமரேசன் என்பவரின் மனைவி காளம்மாள்;

17.10.2015 அன்று சிவகங்கை மாவட்டம், கீழப்பூங்குடி கிராமத்தைச் சேர்ந்த திரு. ரவிச்சந்திரன் என்பவரின் மகன் ராகுல் காந்தி;

18.10.2015 அன்று காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், தெள்ளிமேடு கிராமத்தைச் சேர்ந்த திரு. கோபால் என்பவரின் மகன் செல்லன்;

20.10.2015 அன்று மதுரை மாவட்டம், மேலூரைச் சேர்ந்த திரு. காளிமுத்து என்பவரின் மகன் ராகுல்;

–– ஆகியோர் மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த **16** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா மூன்று லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

4.10.2015 அன்று திருவண்ணாமலை மாவட்டம், கொட்டாவூர் கிராமத்தைச் சேர்ந்த திரு சடையன் என்பவரின் மகன் சின்னபையன், திரு சின்னதம்பி என்பரின் மகன் பழனி;

6.11.2015 அன்று திருநெல்வேலி மாவட்டம், கடையநல்லூர் வட்டம், வேலப்பநாடாரூர் கிராமத்தைச் சேர்ந்த திரு பால்ராஜ் என்பவரின் மகள் சிவரஞ்சனி;

7.11.2015 அன்று சேலம் மாவட்டம், சேலம் தெற்கு வட்டம், புத்தூர் கிராமத்தைச் சேர்ந்த திரு தங்கவேல் என்பவரின் மகன் முருகன்;

22.1.2016 அன்று விழுப்புரம் நகரத்தைச் சேர்ந்த திரு அந்தோணி;

திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், சுந்தரேசபுரம் கிராமத்தைச் சேர்ந்த திரு பெருமாள் என்பவரின் மகன் பால்ராஜ் ;

14.12.2015 அன்று சென்னை, நெற்குன்றம், சக்தி நகரைச் சேர்ந்த திரு அன்புராஜ் என்பவரின் மகன் சாமுவேல்;

––––ஆகியோர் பல்வேறு விபத்துகளில் உயிரிழந்தனர் என்ற செய்தியை அறிந்து நான் மிகவும் துயரம் அடைந்தேன்.

மேற்கண்ட தேதிகளில் உயிரிழந்த இந்த இந்த **7** நபர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்வதுடன், அவர்களின் குடும்பங்களுக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து தலா ஒரு லட்சம் ரூபாய் வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**